06.06.2024

O.S.No.156/2019

வா.சா.1.திரு.பாண்டி ஆசாரி த.பெ.மணி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

கோபாலகிருஷ்ண கோன் அறக்கட்டளை இருந்ததாக நான் சொல்லி உள்ளதால் அது சம்பந்தமான ஆவணங்களை நான் விசாரித்து பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் எனக்கு படிக்த் தெரியாது என்பதால் வேறு ஒரு நபரை வைத்து விசாரித்து தெரிந்து கொண்டேன். நான் அவ்வாறு கோபாலகிருஷ்ண கோன் அறக்கட்டளை சம்பந்தமான ஆவணங்கள் பார்த்து தெரிந்துகொண்டேன் என்பதனை எந்த கால கட்டங்களிலும் பார்த்து தெரிந்துகொண்டேன் என்பதனை, எனது பிராதிலும் சரி, நிருபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். கோபாலகிருஷ்ணகோன் அறக்கட்டளை சம்பந்தமான எந்த ஆவணங்களும் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி அறக்கட்டளை சம்பந்தமான தீர்மானத்தினை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். யாரிடம் இருந்து அந்த ஆவணத்தினை வாங்கி பார்த்தேன் என்றால், எனக்கு சொத்தினை கிரையம் வாங்கி கொடுத்த முத்துராமன் என்பவரிடம் இருந்து வாங்கி பார்த்தேன், அவர் தற்போது உயிருடன் இல்லை, அந்த ஆவணத்தினை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

2. கோபாலகிருஷ்ணகோன் அறக்கட்டளை சம்பந்தமாக எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலுமு, நான் அது சம்பந்தமான எந்த ஆவணத்தினையும் வாங்கி பார்த்து கிடையாது என்றாலும், இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. இஎம்ஜி சௌந்திராஜன் கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்ட்டாக ரூபாய்.50,000 வைப்பீடு செய்துள்ளார் என்று நான் கூறியுள்ளதால் அதற்கான ரசிதை நான் பார்த்துளளேனா என்றால் பார்த்துள்ளேன். எந்த வங்கியில் அவர் வைப்பீடு செய்துள்ளார் என்றால் இரண்டு வங்கிகளில் வைப்பீடு செய்துள்ளார், ஆனால் எந்த வங்கி என்று தெரியவில்லை. மேற்படி ரூபாய்.50,000/-க்கான வைப்பிட்டு ரசிதினை நான் பார்த்தில்லை என்றாலும், வா.சா.ஆ-1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளதை நான் அப்படியே எனக்கு தெரிந்தது போல் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. அந்த ரசிதினை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

3. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-4 பட்டா நான் வட்டாட்சியரிடம் மனு கொடுத்து பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எனது மனுவின் பெயரில் விசாரணை நடத்தினார்கள் என்றால் சரிதான். மேற்படி பட்டா வழங்குவதற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-4 ஆவணமான பட்டாவினை எனது செல்வாக்கினை பயன்படுத்தி பிரதிவாதிக்கு அறிவிப்பு எதுவும் கொடுக்காமல் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-1 ஆவணம் நகல் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதே போல் வா.சா.ஆ-3 ஆவணமும் நகல்தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது பிராதில் சொல்லப்பட்டுள்ள அசல் வழக்கு எண்.75/2011, அசல் வழக்கு எண்.676/2009, அசல் வழக்கு எண்.594/2009, அசல் வழக்கு

எண்.675/2009, அசல் வழக்கு எண்.671/2009 ஆகிய வழக்கு விவரங்கள் பற்றி எனக்கு 2009ம் ஆண்டே தெரியும் என்றால் தெரியும். பிரதிவாதிகளுக்கு நிறைய சொத்துக்கள் இருப்பதால் இந்த தாவா சொத்தினை அசல் வழக்கு எண்.75/2011, அசல் வழக்கு எண்.676/2009, அசல் வழக்கு எண்.594/2009, அசல் வழக்கு எண்.675/2009, அசல் வழக்கு எண்.671/2009 ஆகிய வழக்குகளில் காட்டவில்லை என்பதற்காக தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு சொந்தம் அல்ல என்று கூறமுடியாது என்றால் சரியல்ல.

4. பிரதிவாதி தரப்பு தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் தாவா சொத்தினை அய்யனார் மோசடியாக அவரது பெயருக்கு ஆவணங்களை உற்பத்தி செய்து, 3ம் நபருக்கு கிரையம் செய்து அந்த கிரைய சொத்தினை நான் கிரையம் வாங்கி உள்ளதால், அய்யனாருக்கு தாவா சொத்தில் எந்தவித உரிமையும் சித்திக்காத நிலையில் எனக்கும், தாவா சொத்தில் உரிமை இல்லை என்று மறுத்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தில் எனது உரிமையை மறுத்து பிரதிவாதிகள் எதிர் வழக்காடுவதால், தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கேட்காமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியிருப்பது சட்டப்படி நிலை நிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ-22 ஆவணம் நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் சம்பந்தபட்ட அலுவலரிடம் மனு அளித்து பெறப்பட்ட ஆவணம் அல்ல என்றால் சரிதான். மேற்படி ஆவணம் நகல் என்பதால் அந்த ஆவணம் சட்டப்படி சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல.

5. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பெரும்பான்மையான ஆவணங்கள் நகல்கள் என்பதால் அந்த ஆவணங்கள் சட்டப்படி சாட்சியமாக ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எதிரிடை பாத்தியம் இருப்பதாக எனது பிராதில் நான் சொல்லி உள்ளதால் அந்த சங்கதி சட்டப்படி ஏற்றுக்கொள்ள சங்கதி அல்ல என்றால் சரியல்ல. தாவாசொத்து ஆரம்ப காலம் முதல் தற்போது வரை பிரதிவாதி வகையறா பள்ளி விளையாட்டு மைதானமாக இருந்து வருவதால் நான் ஒது போதும் தாவாசொத்தில் இருந்து வருவதில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ-3 வரையான ஆவணங்கள் பெயரளவில் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றாலும், அந்த ஆவணங்களின் அடிப்படையில் நான் எந்தவித உரிமையோ பாத்தியதையோ கோர இயலாது என்றாலும், எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

6. தாவா சொத்து இன்று வரை பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருவதால் தான் விளம்புகை பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அய்யனாரை எனது தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான், அவர் தற்போது உயிருடன் இல்லை. அவர் இறந்துபோன சங்கதியை பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து கோபாலகிருஷ்ணகோன் பள்ளிக்கு பாத்தியப்பட்ட மைதானம் என்பதால், பள்ளி கல்வி துறையை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அவர்கள் அவசிய தரப்பினர் அல்ல என்பதால் சேர்க்கவில்லை. இந்த வழக்கில் நான் அவசிய தரப்பினர் சேர்க்கவில்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

தாவா சொத்தில் மதிப்பு, நான் வழக்கு தாக்கல் செய்த போது செண்டு சுமார் 3 முதல் 5 லட்சம் வரை சந்தை மதிப்பாக இருந்தது. தாவா சொத்து மாநகராட்சி எல்லையில் உள்ளது என்றால் நான் வழகசு தாக்்ல செய்த போது மாநகராட்சி கிடையாது, தற்போதுமாநகராட்சி எல்லைக்குட்பட்டது. தாவா சொத்திற்கு முறையாக மதிப்பிடு செய்து நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்ற காரணத்திற்காக வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையோ, பாத்தியதையோ கிடையாது என்றாலும், நான் ஒரு போதும் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்தது இல்லை என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.